DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 106/2018

List of Witness : Lw3

Prosecution Witness : PW9

| பெயர்: | பிரகாஷ் | ஜாதி: | |
|---|---|---|---|
| தந்தை / கணவர் பெயர் : | நாராயசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 17/02/2025

(எதிரி ஆஜர் )

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் சிந்தலவாடம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். 2018 ஆம் வருடம் 5 வது மாதம் தேதி சரியாக ஞாபகம் இல்லை. மதியம் 12.00 மணி இருக்கும். சிந்தலவாடம்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த போது கிழக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்த அரசு பேருந்து மேற்கே இருந்து இருசக்கர வாகனத்தில் இரண்டு சின்ன பிள்ளைகளுடன் மாரிமுத்து, தங்கபொண்ணு ஆகியோர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அப்போது கிழக்கேயிருந்து வந்த அரசு பேருந்தானது ஸ்பீடாக வந்து இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் நான்கு பேருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த மாரிமுத்து சீரியஸான நிலையில் இருந்தார். பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் அவர்களை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தோம். நானும், பாலசுப்பிரமணியனும் ஆம்புலன்ஸ் பின்னாலேயே சென்று பார்த்தோம். மாரிமுத்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அரசு பேருந்தை ஓட்டிவந்த நபரை விபத்தின் போது பார்த்தேன். பல வருடங்கள் ஆனதால் சரியாக ஞாபகம் இல்லை. நீதிமன்றத்தில் அவர் உள்ளாரா என்று தெரியவில்லை. (எதிரி ஆஜர்). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–

1) போலீசார் எங்கு வைத்து எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் எனக்கு நினைவில்லை, ஆனால் விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்த போது நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் ஆம்புலன்ஸ் பின்னாலேயே சென்றதாக சொல்லியுள்ளேன் என்றால் நினைவில்லை. விபத்து நடந்த பகுதி மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ளது பகுதி என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சாலை குறுகலாகத்தான் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வாகனங்கள் மெதுவாகத்தான் செல்ல முடியும் என்றால் சரிதான். நான் விபத்து நடந்தவுடனே ஓடி போய் பார்ப்பதற்கு முன்பாக 10,20 நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் சரியல்ல, ஆனால் நான் அங்கு தான் நின்று இருந்தேன்.

2) விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தில் நான்கு நபர்கள் பயணம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் அரசு பேருந்தால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும், இருசக்கர வாகனத்தில் நான்கு நபர்கள் வந்து தடுமாறி விழுந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் அரசு பேருந்து சம்பவ சமயத்தில் வேகமாக வரவில்லை என்றாலும், சம்பவ இடத்தில் பேருந்தை வேகமாக ஓட்ட முடியாது என்றாலும் சரியல்ல.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S KABALEESWARAN

Digitally signed by S KABALEESWARAN
Date: 2025.02.17 18:18:39 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 17/02/2025